# லீ குவான் இயூ கல்வி நிதியில் இதுவரை $113 மி.

தமிழவேல்

## லீ குவான் இயூ இருமொழிக் கல்வி நிதியை நிர்வகிக்க 16 பேர் கொண்ட புதிய குழு நியமனம்

இரு மொழிக் கல்விக்கான லீ குவான் இயூ நிதியை நிர்வகிக்கும் 16 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழுவை நேற்று கல்வி அமைச்சு அறிவித்தது.

கல்வி அமைச்சர் ஹெங் சுவீ கியட் தலைமை தாங்கும் அக்குழு ஆங்கிலம், தாய்மொழி ஆகிய இரு மொழிகளின் கற்றல் கற்பித்தலுக்கு, குறிப்பாக பாலர் பள்ளி மாணவர்களுக்கு உதவும் புதிய திட்டங்களை உருவாக்கி வழிநடத்தும்.

ஆய்வு, யோசனைகளை மதிப்பிடுதல், நிதி முதலீடு, விளம்பரம், எல்லாரையும் எட்டுதல் ஆகியதுறைகளை மேற்பார்வையிட நான்கு துணைக் குழுக்கள் இருக்கும்.

இருமொழிக் கல்விக்கான லீ குவான் இயூ நிதி, 28 நவம்பர் 2011ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

சிங்கப்பூரில் இரு மொழிக் கொள்கையையும் கல்வியையும் பரப்புவது தமது வாழ்நாள் சவாலாக அமைகிறது என்று முன்னாள் மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ, தமது புதிய புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

'என் வாழ்நாள் சவால்: சிங்கப்பூரின் இருமொழிக் கல்வி பயணம்' என்ற தலைப்பில் திரு லீ குவான் இயூவின் புத்தகம், கடந்த ஆண்டு நவம்பர் 28ம் தேதி வெளியிடப்பட்டது. புத்தகம் வெளியிடப்பட்ட அன்றே சிங்கப்பூரின் பாலர் பள்ளி மாணவர்களிடையே இரு மொழிக் கல்வித்திறனை மேம்படுத்த $100 மில்லியன் நிதியை ஒதுக்க வேண்டும் என்று திரு லீ கேட்டுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து, லீ குவான் இயூ இருமொழிக் கல்வி நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைக்கு ஈடாக அரசும் நன்கொடை வழங்கும் என்று அறிவித்தது.

அன்றிலிருந்து இந்தத் திட்டத்திற்கு சிங்கப்பூரர்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

தமது கையொப்பம் இட்ட புத்தகங்களின் விற்பனையில் திரட்டப்பட்ட $2 மில்லியனுடன் சேர்த்து சொந்தமாக மேலும் $10 மில்லியனைச் சேர்த்து மொத்தம் $12 மில்லியனை திரு லீ குவான் இயூ இந்நிதிக்கு நன்கொடையாக வழங்கி இருந்தார். இதுவரை $113 மில்லியன் நன்கொடை இந்த நிதிக்காகத் திரட்டப்பட்டுள்ளது.

இந்நிதியை நிர்வகிக்கும் புதிய செயற்குழுவில் சமூக பிரதிநிதிகள், கல்வியாளர்கள், ஊடக பிரதிநிதிகள், பொதுச் சேவை அதிகாரிகள் போன்றோர் இடம் பெறுவார்கள். அவர்களில் தேசியப் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியர் டாக்டர் சித்ரா சங்கரன், தேசியப் பல்கலைக் கழக மாணவர் சேர்ப்புப் பிரிவு இயக்குநர் திரு ஆர் ராஜாராம் ஆகியோரும் அடங்குவர்.

"லீ குவான் இயூ இருமொழிக் கல்விக்கான நிதி கடந்த நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டதிலிருந்து, நிதியின் குறிக்கோள்கள் அறிந்து சமூகம் மிகுந்த ஆதரவு அளித்து உள்ளது. நிதிக்கு வழங்கப்பட்ட தாராளமான நன்கொடை கண்டு அகமகிழ்கிறேன். செயற்குழுவும் பல்வேறு குழுக்களும் இந்த நிதியின் மூலம் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்துவது எப்படி என்பதை ஆராயும்.

"பாலர் பள்ளிகளில் தாய்மொழிக் கற்றல், கற்பித்தல் தரத்தை மேம்படுத்தி இரு மொழி மீது சிறார்களுக்கு ஈர்ப்பை ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை உள்ளது.

"ஆனால் பாலர் பள்ளிகளையும் கடந்து பெற்றோருடனான அன்றாட உரையாடலிலும் கல்வித் திட்டங்களின் மூலமும் மொழி வளர்கிறது. அதனால் தற்போதைய தாய்மொழி மேம்பாட்டு இயக்கங்களின், திட்டங்களின் தாக்கங்களைப் பன்மடங்காக்கும் திட்டங்களும் வகுக்கப்படும்," என்றார் கல்வி அமைச்சர் ஹெங் சுவீ கியட்.

தொடக்கக் கட்டமாக, பாலர் மற்றும் மழலையர் பள்ளிகளில் இருமொழிக் கல்வியை அறிமுகப்படுத்துவதில் இந்த நிதித் திட்டம் கவனம் செலுத்தும்.

பக்கம் 2ல் மேலும் விவரம்

tamilv@sph.com.sg